
www.padippakam.com

# தேடல்



தோழர்கள் கார்ல் மார்க்சு, போல் பொட் பிறந்தநாள்
சிறப்பிதழ்

வசந்தத்தின் இடிமுழக்கம் 3, டிசம்பர் 1999

படிப்பகம்

www.padippakam.com

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# தாய் நாட்டில் மூவர் விழா

''இரத்னா கோசின்'' என்றழைக்கப்பெறும் தாய்லாந்து நாட்டின் தென்மாவட்ட நகரொன்றில் 'மூவர் விழா' அண்மையில் நடந்தேறியது.

'தேடல்' இதழியக்க ஏற்பாட்டில் நடைபெற்ற தாய், மலாய் இருமொழி நிகழ்வில் தோழர் அமாட் பாக்தாத் (Ahmad Bagdad) ஆற்றிய உரையின் சுருக்கம்:

வறுமையில் வாடியபோதும் தளர்ந்துவிடாது கட்சி அறிக்கை என்ற மாபெரும் ஆவணத்தை உழைக்கும் மக்களுக்கு ஆக்கித் தந்தார், 'உலகம் நம்மைக் கண்டு பயப்படுகின்றது' என்றுசொன்ன போராளி கார்ல் மார்க்சு.

சீனத்தில் சிறைபட்டும், குகையில் பதுங்கி காட்டுக் கிழங்கையும் கனிவகையையும் உணவாய் கொண்டு போல்சுவிக் கட்சி வரலாற்றைத் தமது மொழியில் ஆக்கி, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இயக்கங் கண்டு வியட்நாமிய மக்களின் அடிமைத் தளையை உடைத்தெறிந்தார் தோழர் ஓ சீ மின்.

உழைத்துழைத்து ஓடாய்ப் போன மக்களின் நிலை கண்டிரங்கி, அம்மக்களின் வாழ்க்கைநிலையினை மேம்படுத்த அக்கறையும் ஆர்வமும் அற்ற

—இதன் தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும்

# தேடல்

ஆசிரியர்:
ஸ்டாலின் போ கூ

தென்கிழக்காசிய வெளியீடு

வசந்தத்தின்
இடிமுழக்கம்- 3
டிசம்பர், 1999

## வீர வணக்கம்

சீனத்தின் வரலாறு நெடியது. மன்னர் ஆட்சி, தொடர்ந்து மாற்றார் ஆட்சி என்று சின்ன பின்னமாகிச் சீர் குலைந்து கிடந்த சீனம் சிவந்தது நீண்ட பயணத்தால். உழைப்பையும் உடைமையையும் ஒன்றாக்கிய மார்க்ஸின் வாழ்வியல் நெறி நோக்கி சோசலிச நாடாய்ப் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டது.

விடுதலைப் பாவாணன் - மக்கள் தலைவனாம் மா-சே-துங் நெடுந்துயில் கொண்டான். மாவோவின் இறுதியாண்டுகளில் தலைமை அமைச்சர் சூ என்-லாயின் வினைப்பாட்டால் வலிமை பெற்றது தெங்- கும்பல். காலத்தின் கோலத்தால் ஆட்சிப் பொறுப்பேற்றார் சூழ்ச்சித்திறமிக்க 'வெள்ளைப்பூனை- கருப்புப்பூனை' சூத்திரத்தின் தந்தை தெங்- சியோ-பெங் எனும் குள்ளன். திறந்த சந்தைப் பொருளியலின் விளைவால், கட்டமைக்கப்பட்ட வாழ்வியல் நெறிகள் மீறப்பட்டு, பெண்களின் உடலுறுப்புகள் வெளிக் காட்டப்படும் விளம்பரங்கள், வழமையாக்கப்பட்டுவிட்ட விபசாரம், சூதாட்ட மையங்கள் என்று

www.padippakam.com



எல்லா அருவருப்புகளோடும் தெங்-கின் கனவு நனவாகிறுது.

அடக்கு முறைகளால் ஏற்பட்ட வெறுப்பினாலும் மாற்றாரின் தூண்டுதலாலும் கிளர்ந்தெழுந்த மாணவர் எழுச்சி- 'தியானன் மென்' சதுக்கத்தில் மாணவர்க்கு ஆதரவாய் மக்கள் திரளத்துவங்கிய நிலையில் - தகரி (TANK)களின் துணையோடு அடக்கி ஒடுக்கப்பட்டது மாபெரும் தலைவனாம் தெங்கினால்.

.. ஆசியாவின் ( A S E A N தென்கிழக்கு ஆசிய தேசங்களின் ஒன்றியம்) நகரங்களில் சதைத் தொழில் துவங்கிவிட்டனர் சீனாவிலிருந்து பணியாற்ற வந்த இளம் பெண்கள். மஞ்சள் பிசாசின் மகிமை இது. பொதுமை நெறிக் கோட்பாடுகள் அர்த்தமற்றதாக ஆக்கப்பட்டுவிட்டன பெருந்தொகை இளையருக்கென்றாலும் "மார்க்சு வண் சூய்" (மார்க்சு நீடுழி வாழ்க ) என்போரும் இருக்கவே செய்கின்றனர்.

தென் கிழக்காசிய விடுதலைப் படைகளின் பின்னடைவுக்கு பெரும் காரணம் தெங்-கின் தலைமை என்பதற்கான ஆதாரங்களை அடுக்க முடியும் நம்மால்.

முதலாளியம் மீட்டெடுக்கப்பட்டுவிட்டது. உறுதியளிக்கிறார் இன்றைய அரசுத் தலைவர் சீயாங் – சீ – ஜமின்: சோசலிச நெறியில் தொடர்ந்து முன்னேறும் தம் நாடு என்று – எல்லா அசிங்கங்களும், அத்துமீறல்களும், அநியாயங்களும் சோசலிசத்தின் பெயரால் சர்வாதிகாரம் உட்பட அரங்கேற்றம் கண்டுவிட்ட நிலையில். பண்பாட்டுப் புரட்சி கண்டவனின் வாரிசுகள் எனப்படுவோரின் கடின உழைப்பால் அலங்கோலமாகி விட்டது சீனப் பெரும் நிலம்.

மாந்த நேயத்தின் மாபெரும் எதிரி மதம்- மார்க்கம் தந்த மயக்கத்தில் மாந்தப் பண்புகள் பின்தள்ளப்பட்டு, புனிதப் போருக்கு ஆயத்தமாகி வருகின்றனர் – தங்களது தனித்தன்மைகளை இழந்துவிடாது 'சோவியத் ஒன்றியத்தில்' வலிமையாய் விளங்கி, இன்று மதத்தின் பேரால் அடையாளப்படுத்தப்படும் நிலைக்குத் தரம் தாழ்ந்துவிட்ட நாடுகளை எல்லையாய்க் கொண்ட வடபுல இளைஞர் கூட்டத்தினர்.

சமூகச் சீரழிவுகள், மேலைய மோகம், அமெரிக்கா ஆதவோடு தனிநாட்டு முரசொலிக்கும் தைவான், மேற்குலக

படிப்பகம்

www.padippakam.com



நோய்ப் பண்புகளால் வளர்த்தெடுக்கப் பட்டுவிட்ட ஒங்காங், மக்காவ், விடுதலை பண்ணிசைக்கும் திபெத் மற்றும் எல்லைப் பிரச்சினைகள்–

இவற்றுக்கிடையில் அணியெனும் பிணி கட்சியுனுள். பல் லாயிரக் கணக்கான தோழர்களின் வியர்வைத் துளிகளால் உருவான, உலக வரலாறு மாறியதற்குப் பெரும் பங்காற்றிய கட்சியும் அரசும், பன்னூறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்து தம் வல்லாண்மையையும் நாட்டின் இறையாண்மையையும் தற்காத்து நூறாண்டு காணுமா? அல்லது வரலாற்றில் அடிச் சுவடுகூட இல்லாமல் மறையுமா?

இன்றைய தலைமை உறுதியான முடிவுகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம். திடமான முடிவும் வினை யும் சீனா சிதறுவதைத் தடுக்கும்.

செங்களமாடி வரலாறு படைத்த
செம் படைத் தோழருக்கு – நம்
வீர வணக்கம்!!

வெல்லட்டும் பாட்டாளி வர்க்கப் படை!

---

## அடுத்த இதழில்—

காட்டு நாகப்பழம் முகாமிலிருந்து சுருள் முடியும், கருப்பு உருவமும் கொண்ட

**சென் யாங் கின்**

நேர்காணல் உரையோடு—

**"தோழமை கிராமம்."**

பண்பாட்டுப் புரட்சி ஒன்றிற்காய்
இந்த நூற்றாண்டின் இறுதியில் புறப்பட்டவர்களின்

**"வெளியீடு"**

படிப்பகம்

www.padippakam.com

## சனநாயக கம்பூச்சியம்

அரிச்சுவடியாய் தமிழியம்
ஆளாக்கியது பெருஞ்சித்திரம்
கருஞ்சட்டை அணிய
கற்றது ஈரோட்டில்
திறனாயும் முறையைச் சொல்லி
பொருள் முதலையும்
இயங்கும் இயலையும்
கற்பித்து உயர்த்தி
கருப்புடையை நிலைக்க வைத்தது
சன நாயக கம்பூச்சியம்.

## கொள்ளையனா?

வெட்டுமரமும்
விலையுயர்ந்த இரத்தினமும்
கொள்ளை போனதாய்
உம்மால். . . .
பிணமாய்க் கிடத்தப்பட்ட
குடிசை கூட
சொந்தமானதல்ல உமக்கு
என்பதனை உலகு அறிந்தது
உன் உடல் எரியூட்டப்பட்ட போது.

## அரக்கனாம் போல் பொட்!

அரக்கனாம்!
கொலைக்கஞ்சா
படுபாதகனாம்!
மக்கள் நலனில்
அக்கறையற்ற
மன்னராட்சியை-சாடிய
எட்டுப் பக்க

படிப்பகம்

www.padippakam.com

கட்டுரைக்காக
அரசின், கல்வி
உதவித் தொகையை
இழந்தானே!
அந்த
போல் பொட்.....!!!

## சிறந்தவர் யார்?

சிறந்தவர் பிடலா! போல் பொட்டா!
என்றெம்மை சீண்டினான்
பேதையொருவன் போதையில்.

இரண்டு கண்ணில் உமது
விருப்பத்திற்குரியது எதடா...?
இயம்படா என்றேன்
கண்டேன் இல்லை அவனை.

கொலையாளியென்றும்
கசாப்புக் கடைக்காரனென்றும்
புழுதி வாரி கொட்டுகின்றார்கள் உம்மீது!
வசவுகளை வாரியிறைக்குமிவர்கள்,
உழைக்கும் மக்களின் மெலிவுகளை
பயன்படுத்தி அவற்றை முதலாக்கி
மானுடத்தை மலினப்படுத்தியவர்கள்
வரலாற்றின் குப்பைத்தொட்டிகள்.

அங்கோரையே கட்டியெழுப்ப
முடிந்த நம்மால்
இயலாதது எது?
எனக் கேட்ட தோழனே!
"பண்பாட்டுப் புரட்சி"
ஒன்றிற்காய்
இந்த நூற்றாண்டின்
இறுதியில்
நெடும் பயணம்
புறப்பட்டு விட்டோம் நாங்கள்...

படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு உண்மை ஆவணங்க ளின் தொகுப்பாய் அமைய...

**இனியவன்**

தோழியொருவர் - என் பொழுது மகிழ்வாய் புலர பூபாளம் பாடிய புள்ளினம்- தொடர்ந்த முயற்சிக்குப்பின் தொலைபேசினார். நான் இருப்பதை உறுதி செய்துகொண்டு மகிழ்ந்தவர், மறு கணம் சோகமாய் ஒலித்தார். அண்மையில் கொலம்பிய அரசு படையுடனான போரில் களச்சாவடைந்த போராளிகள் பற்றி கதைத்தார். இவரின் மகிழ்வின்மைக்கும் செம்படைத் தோழர்க்கும் என்ன தொடர்பு? குழம்பினேன். காரணம் வினவினேன். வீரமரணம் அடைந்த இருபது தோழர்கள் வறிய மக்களுக்கு ஆற்றிய தொண்டு நின்று போனது என்று இடை நிறுத்தினார். வியந்து போனேன். ''இருபதாம் நூற்றாண்டிற்கு அப்பால் மார்க்கியத்தின் தேவை'' என்றொரு பொழிவை தொலைபேசிவழி என்னிடம் அமைவாய்க் கேட்டார். நெகிழ்ந்து போனேன். பழைய நினைவுகள் நிழலாடின; நினைவுகள் இனியன.

பல்வேறு நேரத்திலும், இடத்திலும் மார்க்கியத்தை சாடியவர்; விவாதம் என்ற பெயரால் செஞ்சிந்தனையிலிருந்து என்னை மீட்டுவிட சூளுரைத்தவர்; என் மீதான அன்பின் வெளிப்பாடு அது. மங்கலாய் தெரியும் நிகழ்வுகளுக்கு அகவை ஒன்பது. பாலை நிலத்திலும் பச்சைப் புரட்சி.

விதைத்து கொண்டேயிருப்போம்- விளைச்சலைப் பற்றிய கவலை வேண்டாம் என்ற பெருஞ்சித்திர முழக்கம்....... காலத்தை வென்றவர் கார்ல் மார்க்சு என்ற பூரிப்பில் திளைத்துப் போனேன்.

கருத்து மக்களைப் பற்றிக்கொண்டால் வேதியல் (இரசாயனம்) ஆற்றலாய் மாறும் என்ற மார்க்கின் கூற்று நடப்பியல் உண்மை என்றாலும், அக்கருத்து உழைக்கும் மக்கள் திரளை சென்றடைய நாம் ஆற்றவேண்டிய பணி மிகப்பல. தென் கிழக்காசிய விடுதலைக்கு பொதுவுடமை மெய்யியலின் பங்க

படிப்பகம்

www.padippakam.com



ளிப்பு உள்ளடக்கிய உண்மை வரலாறு எழுதப்பட நாம் கடக்க வேண்டிய காட்டாறுகள் பல உள.

பிரிட்டன் தூதர் என்றி கர்னி ( Henry Gurney ) கொல்லப் பட்டது மலாய் பொதுவுடமைக் கட்சியின் படைப்பிரிவால். அடிவருடி ஆட்சியாளர்களின் கட்டளையின் பேரில் தயாரிக் கப்பட்ட பாடப் புத்தகங்களில் பயங்கரவாதிகளால் கொல்லப் பட்டார் என்றே உள்ளது. தவிரவும் அமைதி (அகிம்சை) வழியில் பெறப்பட்ட விடுதலை என்றே கற்பிக்கப்படுகின்றது. இக்கயவர்களின் கூற்றுப்போல் தாம்பூலத்தில் வைத்து தரப் பட்டதல்ல அன்றைய மலேசிய சுதந்திரம். அவ்விடுதலைக் காய் சிந்தப்பட்ட குருதி எவ்வளவு!

ஒல்லாந்தரால் படுகொலை செய்யப்பட்ட இயக்கத் தோழர் கள் கொஞ்சநஞ்சமா பழைய பத்தேவியாவில்! எந்த ஒரு நட வடிக்கையைக் காரணியங்காட்டி ஏகாதிபத்திய உறுதுணை யோடு புங்கார்னோவின் தலைமையை அகற்றி ஆட்சிக்கு வந் தாரோ சுப்பர் செமார்- அந்த செப்தம்பர் 30 இயக்க நிகழ் விற்குப் பின் தொடங்கி தொடரப்பட்ட களையெடுப்பிலும், தலைமையை பலப்படுத்திக்கொள்ள நயவஞ்சகன் சுகர்தோ வின் ஆணையின் பேரில் வேட்டையாடப்பட்ட இயக்கதினரு டைய வழித்தோன்றல்களின் எண்ணிக்கை கொஞ்மும் குறை வானதல்ல. சிறைபிடிக்கப்பட்டோர் "தடுப்புக்காவல்" என் பதின் பேரில் வேட்டைத் தீவில் ( Buru Island – Pulau Buru ) திரிய விடப்பட்டனர். அடிப்படை வசதிகளற்ற, மொத்தத் தில் மாந்தர் வாழ்வதற்கேற்ற நிலையில் இல்லாத தீவு அன்று. கடலுயிரி, காட்டு உயிரினங்களின் தாக்குதல்களுக்கிடையே யும் தீவை வளமிக்க வாழ்விடமாக்கினர் தோழர்கள். இன் றைக்கும் கட்சி பொறுப்பு வகித்தோரின் வழிவந்தோர்க்கு அரசு அலுவல்கள் மறுக்கப்படும் நிலை.

இன்றைய மியான்மாரின் (பழைய பர்மா) விடுதலைக்கு செம்படையின் பங்களிப்பு பாரியது. நிப்பொன் படையி னர்க்கு ஏற்பட்ட இழப்புகள் அறுபது (60) விழுக்காட்டிற்கும் மேற்பட்ட முப்பதாயிரம் (30,000) போராளிகளைக் கொண் டிருந்த பர்மிய பொதுவுடமைப் படையால்தான் என்பதும் ஆய்ந்தோர் குறிப்பு.

www.padippakam.com



தாய் அரசுப் படையால் படுகொலை செய்யப்பட்டோர் எண்ணிக்கையும் குறைவானதில்லை. அதன் பின்னர்தான் வாழ்வதற்கான வாய்ப்பு (பொது மன்னிப்பு) வழங்கப்பட்டது.

"புதிய மக்கள் படை" இன்றைக்கும் பிலிப்பைன்சு அரசை மிரட்டலுக்குள்ளாக்கியுள்ளது என்றாலும், விதையாகிப் போனோர் சிறுதொகையினரல்லர்.

இப்படி தென்கிழக்காசிய விடுதலைக்கும் உரிமைகளுக்கும் செங்களமாடிய நம்மவர் தொகை மற்றவர் எவர்க்கும் குறைந்தது அல்ல. விடுதலைக்குப் போராடி விதையாகிப் போனோரின் இயக்கம் மேற்சொன்ன அத்துணை நாடுகளிலும் தடை செய்யப்பட்டுவிட்ட இழிநிலை!

இத்தகைய உண்மைச் செய்திகளை உழைக்கும் மக்களை திர்ப்பு ஆட்சியினரும் அவர்தம் அடிவருடிகளும் வெளியிடுகிற ஏடுகளிலும், பக்கங்களிலும் படிக்க வியலாதுதான். அவ்வாறு எதிர்பார்ப்பதும்கூட முதலாளிகள் மனமிரங்கி, தொழிலாளிகளுக்குக் கூலியை உயர்த்திக் கொடுப்பார்கள் என்று எண்ணுவதைப் போன்றதே.

ஆகவே திருமணத்திற்கும் பெயர் சூட்டு விழாவிற்கும், ஏனைய பலவகை விழாக்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் செலவிடும் நேரத்தைக் குறைத்துக்கொண்டு படிப்பதற்கும், குறிப்பெடுப்பதற்கும், ஊர்சுற்றி உழைக்கும் மக்களுடன் உறவு கொள்வதற்குமான காலத்தை கூட்டிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகைய வினைப்பாடு தொண்டாக அல்ல, கடப்பாடாய் தோழர் ஒவ்வொருவராலும் எண்ணப்படுதலும், உணரப்படுதலும் வேண்டும். வரலாறு நம்முடையதாய் அமைய இது வழிகோலும்.

அடக்குமுறைகளை உடைத்தெறியவும் வரலாறு உண்மை ஆவணங்களின் அடிப்படையில் மாற்றி எழுதப்படவும் எழுதுகோல் இங்கோர் நெம்புகோல் ஆகட்டும்.

---

## வறுமைப் பிணி... தனிச்சொத்துடைமை

**உழைக்கும் மக்களின் வறுமைப் பிணிக்குப் பெருங்காரணியம்**
**தன்னலத்தின் வெளிப்பாடாம் தனிச் சொத்துடைமை**
**என்பதனை மறுப்பார் யாரோ!**

படிப்பகம்

www.padippakam.com

# அண்ணலின் விடைகள்

**கேள்வி கெமர்ருச் என்பதன் பொருள்?**

பதில்: தேரவாதம், மகாயானம் என்ற இருபெரும் புத்தப் பிரிவுகளைச் சார்ந்தோரை பெரும்பான்மையினராய்க் கொண்ட, புன்னகையைத் தொலைத்து விட்ட இனக்குழு ஒன்றின் பெயர் "கெமர்." செவ்வண்ணத்தை ருச் என்பர் பிரெஞ்சு மொழியில். கருப்பு சீருடையுடன் கட்டம் போட்ட துண்டைக் கழுத்தில் கட்டிய போராளிகளைக் கொண்ட கரந்தடி படையினர்; உழைக்கும் மக்களின் விடுதலைக்காய்த் தோற்றுவிக்கப்பட்ட 'செங்கெமர்' இயக்கத்தின் சித்தாந்தம் மானுடம் தழைக்க வந்த மார்க்சியம். ஆசியாவின் வலுமிக்க மக்கள் படையாய் இயங்கியதும், அரசமைத்ததும் பொற்காலம். அவ்விடுதலை விரும்பிகளின் ஆசான் தான் நம்முள் பாரியதொரு தாக்கத்தை விளைத்த பண்பட்ட புரட்சியாளன் தோழர் போல் பொட்.

## சைவம் அறிவு கெட்டதனம்

**கேள்வி; தமிழரின் துவக்க மதம் சைவம்தானே?**

பதில்: மஞ்சள் முனியை தமிழர் தலைவர் என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவர் பாமரர். இவர்களுள்ளும் இருவகையினர். உண்மை நிலை அறியாதோர் ஒரு பிரிவினர் என்றால் நக்கிப் பிழைக்கும் சந்தர்ப்பவாதிகள் மற்றையோர். அதுபோல்தான் இதுவும். சமயத்திற்கும் சைவம், சாப்பாட்டிற்கும் சைவம். என்ன வெட்கக் கேடு.

உலகாய்தம் (பொருள் முதல்) துவங்கி புத்தம், சமணம், ஐம்பூத நம்பிக்கை, வள்ளுவம், ஆசீவகம் என்று பல்வேறு நம்பிக்கைகள் தமிழரிடத்தில் விளங்கின. சிவ மதம் மிகவும் பிற்காலத்தியது. இவைகளைச் சொல்லும் ஆய்வுகள் தமிழில் குறைவு. ஏன்; ஆரிய-பார்ப்பனிய வஞ்சகத்தால் வரலாற்றுச் சான்றுகள் அழிக்கப்பட்டதும், இவ்வினக்குழு தொடர்ந்து அடிமையாகிப் போனதும், ஆய்வாளரைப் பேணிப் புரக்காததும், மொத்தத்தில் அறிவு கெட்ட தன்மையும்தான்.

படிப்பகம்

www.padippakam.com



**கேள்வி: ஒருபுறம் மார்க்கியம், மாந்தரேயம்; மறுபுறம் பார்ப்பன எதிர்ப்பு. என்னே உங்கள் இரட்டை நிலைப்பாடு!**

பதில்; மாந்தரைப்பாடு, மக்களே மகத்தானவர்கள் என்பதெல்லாம் மார்க்கிய பாலபாடம். நெற்றியில், தோளில், தொடையில், காலில் பிறந்தவன் என்று உழைக்கும் மக்களைப் பிரித்து இழிவு படுத்துவது பார்ப்பனிய நயவஞ்சகம். உழைப்போர்க்கே உலகு சொந்தம். உழைப்பை மலினப்படுத்தும் மநுதர்மமோ, தெய்வத்தின் குரலோ, இரத்தத்தை வியர்வையாய் சிந்தும் மக்களுக்கு என்ன நன்மையைச் செய்துவிடும்? இக்கழிவுகளை தலையில் சுமப்பதோடு மட்டுமின்றி அவற்றை செயற்படுத்த விழையும் உஞ்சவிருத்திக் கூட்டத்தைத்தான் நாம் எதிர்த்து அறைகூவல் விடுக்கிறோம்; அம்பலப்படுத்துகிறோம்.

**கேள்வி: ஏற்றத் தாழ்வற்ற வாழ்க்கை முறைக்கு என்ன வழி?**

பதில்: மார்க்கியமே! மார்க்கிய அறிவியல் சொல்லும் வாழ்வியல் நெறிமுறைகளே.

---

## ஓய்வதில்லை

காற்று நிற்கும் வரை
அலைகள் ஓய்வதில்லை

சிந்தனையோட்டம் தடைபடும் வரை
"தேடல்" ஓய்வதில்லை

மதங்கள் இருக்கும் வரை
அறிவியக்க வினைகள் ஓய்வதில்லை

உழைக்கும் மக்களின்
அடிமைத் தளைகள்
அறுபடும் வரை
மார்க்கியப் போர் ஓய்வதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கு தீமோர்

பூசாங் இலா போக்

தென்கிழக்காசியப் பொருளியல் மீட்சியின் தாமதத்திற்கு காரணம் இந்தோனிசியா என்று பொதுவாயும், தீமோர்தான் என்று குறிப்பாயும், அங்கே வன்முறை அன்றாட நிகழ்வாகிவிட்ட நிலையில், அதுபற்றியும் கதைக்கப்படுகின்ற வகையிலே, ஒரு நாளில் ஒரு முறையாகிலும் 'தீமோர்' என்ற பெயர் பெருந்தொகை மக்கட் திரளினரால் உச்சரிக்கப்படுகின்றது.

தங்களைச் சுற்றி நடப்பதைப் பற்றிய உண்மையை அறியும் தன்மையற்றவர்களாக இம்மக்கட் கூட்டம் மாறிவிட்டதற்கு நுகர்வுப் பண்பாடும், ஆளும் அரசு நிறுவனங்களும் தன்னலமுமே காரணங்கள். இவர்களின் கூற்று உண்மையா இல்லையா என்றாய்வது அல்ல நம் பணி. மேலும் உலகப் பரப்பில் பல நாடுகள் விடுதலை பெற 'கிழக்கு தீமோர்' எடுத்துக்காட்டானதாகட்டும் என்ற வேட்கையே இவ் உரைக்கான அடிப்படை.

வீரம் சொறிந்த தீமோர் மக்களின் போராட்டம் பல்வேறு வகையில் கொடுமையாய் நசுக்கப்பட்டு வந்தது பாக் கார்த்தோ அரசுத் தலைவராய் தொடர்ந்த வரை. கோல்கார் சாம்ராச்சிய வலிமை குன்றியது கிளர்ந்தெழுந்த மாணவர் எழுச்சியால். பதினேழாயிரம் தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய இந்தோனிசியாவில் 'குருதி' வெள்ளமாய் பெருக்கெடுத்தோடியது. உழைக்கும் பல்வேறு இனக்குழுக்களை சுரண்டி, வைப்பகங்களில் பதுக்கி வைத்த இந்தோனேசிய-சீன வம்சாவளி சுரண்டலர்களில் பெரும்பாலோர் நாட்டை விட்டோடினார்கள். மதத்தின் பேராலும் தொடர்ந்தன வன்முறைகள். இடைக்கால அரசுத் தலைவராக அபிபி பொறுப்பேற்றார்.

இனியும் தாக்குப் பிடிக்கவியலாது என்ற நிலையில் வாக்கெடுப்பிற்கு இசைந்தது கோல்கார் அரசு. தன்னால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட குண்டர்களை ஏவி, மக்களை பயமுறுத்தி விடுதலைக்கு ஆதரவாய் வாக்களிப்பதை தடுக்க முயன்று தோல்வி கண்டது. தங்கள் நீண்ட காலப் போரட்டத்திற்கு ஆதரவாய் வாக்களித்தனர் மக்கள். அம்மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்லாமல் அவர்களை படுகொலை செய்து குவித்தனர் கருவி ஏந்திய குண்டர்கள். இந்தோனேசியப் படையின் ஒத்துழைப்போடு அனைத்தும் அரங்கேறின. கொடுத்த வாக்கை மறந்தார் படைத்தலைவர் வீராந்தோ.

www.padippakam.com



வானொலி நிலையம் கொளுத்தப்பட்டு, வங்கி, பல்கலைக்கழகம் என்று பலவும் எரிக்கப்பட்டு வெற்றுத் தரையானது தலைநகராம் ''டிலி''. தீமோரைக் காத்து இந்தோனேசியாவை இழக்க தயாரில்லை வெள்ளை மாளிகை என்றாலும், மாற்று வாய்ப்பில்லாத நிலையில் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிசைந்து பன்னாட்டுப் படைகளை அனுமதித்தார் அபிபி நிபந்தனைகளோடு.

இந்தோனேசியாவின் பகுதியாய் இருக்க வேண்டிய தீமோர் போர்த்துகேயரால் ஆளப்படுவது வரவேற்கத்தக்கதல்ல என்றார் அன்றைய அத்திரேலிய தலைமையமைச்சர். தங்கள் கருத்தை மாற்றிக் கொண்ட இன்றைய அத்திரேலியர் தீமோரை தனிநாடாக்குவதில் முனைந்து நிற்பதற்கான காரணம் தங்கள் நலனுக்கானதே என்றாலும் இன்றைய நிலையில் அவர்களின் பணி பாராட்டத்தக்க ஒன்றே. வருங்கால தலைமுறையினுடைய எழுச்சியின் விளைவு அத்திரேலியாவுக்கு எதிராய் மாறும் என்பதனை நாளைய வரலாறு நிச்சயம் உணர்த்தும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் தீமோர் ஆதரவு செய்தியாளர் கூட்டத்திற்கு அனுமதி மறுத்த பிலிப்பைன் அரசு உலக ஒன்றியப் பேரவையின் அமைதிப் படையில் தம் படைஞர்களை இணைத்துள்ளது. துணைத் தலைமை தாய் நாட்டிற்கு. செசுனியாவிற்கும் செர்பியாவிற்கும் ஆதரவாய் உரத்த குரலெழுப்பும் மலேசிய அரசின் நிலைப்பாடும், வினைப்பாடும் நிறைவாய் இல்லை. கத்தோலிக்கம் மட்டுமல்ல காரணம். இந்தோனேசியாவுடனான தொன்று தொட்ட உறவும்தான். தைவான் சிக்கலில் ஒன்றுபட்ட சீனாதான் எங்கள் நிலை என்று அறிவித்த சிங்கப்பூரின் நிலைப்பாடு வழமைபோல் மதில்மேல் பூனைதான் தீமோரைப் பொறுத்த மட்டில்.

1975இல் இந்தோனேசியா தீமோரை தம்முடைய மாநிலங்களில் ஒன்றாக்கிக் கொண்டதை ஐநா அங்கீகரிக்கவில்லை என்றாலும் பாரிய நடவடிக்கை மேற்கொள்ளாததால், அன்று துவங்கி நேற்றுவரை கொல்லப்பட்டோருக்கு ஐநாவே பொறுப்பென்பதால், மாண்டோரின் குடும்பத்தினர்க்கு வாழ வசதிகள் செய்தல் வேண்டும்.

தாயக மீட்புக்காய் பல்வேறு இழப்புகளையும் இன்னல்களையும் அனுபவித்த உழைக்கும் வகுப்பின் வாழ்க்கைத் தரம் மேம்படட்டும் விடுதலை பெற்ற கிழக்குத் தீமோரில். அதற்கான ஆக்கப் பணிகளில் ஈடுபடட்டும் அரசு நிறுவனம். ●

படிப்பகம்

www.padippakam.com

# படைப்பாளியும் படைப்பும்

## 1. உலகாயுதா உத்ரா:

உலகாயுதா உத்ரா: மூத்த தோழரான இவர் வினோத் மிசுரா பாதைக்காக (பன்றித் தொழுவ பாராளுமன்ற ஓட்டுப்பெட்டி அரசியல்) தோழர்களால் விமர்சிக்கப்படுபவர். பிறந்த நாள் சிறப்பிதழுக்கு செய்தி வேண்டினோம். நடப்பியல் வாழ்க்கை, பெரியாரின் பணி, ஈழப் போராட்டம் என்று மூன்று கவிதைகள். அதில் ஒன்றுதான் இதில் பதிவாகியிருப்பது. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், பண்பாட்டுப் புரட்சி என்பதெல்லாம் கனவு என்று கருதினாலும் விமர்சனங்களை ஒரு புறம் தள்ளி, அவ்வப்போழ்து எம்மோடு ஓடிக்கொண்டிருப்பவர். "எங்கள் முழு மூச்சாம் மூவேந்தர்கள்" இவரின் ஆக்கம்.

### எங்கள் முழுமூச்சாம் மூவேந்தர்கள்

மனிதத் தத்துவத்தின் தந்தை
மார்க்சு எனும் மாமேதை
மண்ணில் வந்துதித்து
மனித வாழ்வுக்கு பொருள் தந்தார்

மனிதனாய் வாழ
மானத்தோடு வாழ
விடிவெள்ளியாய் வந்த
வெண்தாடி வேந்தர்
வாழ வழி தந்தார்

அன்று
பள்ளியில் படித்த
புறநானூற்றைப் புறந்தள்ளி
இன்று
எங்களின் அடையாளத்தை
எட்டுத்திக்கும் எடுத்துரைக்கும்
தம்பி தளபதி மனதில் உரம் தந்தார்
இந்த மூவேந்தரும்
எங்கள் முழு மூச்சாய் நிற்கின்றனர்.

www.padippakam.com



## 2. நண்பர் ச்சேக் (Jack)

ஐரோப்பாவை பிடித்துலுக்கிய கம்யூனிச பூதத்தின் மூலவரான கார்ல் மார்க்சின் பிறந்த நாள் சிறப்பிதழுக்கு படைப்பு வேண்டிய தும் அரை மணி நேரத்தில் அணியமானது "விடுதலைக்கு வழி சொன்ன மார்க்கியம்." படைத்தளித்த நண்பர் ச்சேக் (Jack). தோழர் போல் பொட்டும், கெமரூச் இயக்கமும் ஏற்படுத்திய தாக்கத்தில் மார்க்கியம் பயில வந்தவர்.

மாற்றிவிட வேண்டும் இவ்வமைப்பை; அதற்கு அடிப்படைப் பணி "பண்பாட்டுப் புரட்சி" என்று உரத்தொலித்து, பல்வேறு "தேடல்" செலவுகளில் பயணித்தவர். மாவீரன் "சே"யின் வரலாறு அறிந்த பின் ச்சேக் குவேரா (Jack Guevare) வாக மாறிப் போனவர். ஆம். அப்படித்தான் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். செங்கெமர் இயக்க சிதைவு குறித்து பலத்த வருத்தத்திற்குள்ளானவர்... இந்த நூற்றாண்டின் இறுதியில் புறப்பட்டவர்களின் பட்டியலில் தம் பெயரையும் பதிந்து கொண்டவர். அண்மைக் காலத்திய மௌனம் புரிதலுக்கானதா, அடுத்தகட்ட வினைப்பாட்டிற்கானதா அல்லது மனித விழுமியங்களை புறக்கணித்துவிட்ட இந்த அமைப்பில் பங்கெடுத்துக் கொள்வதற்கான ஒத்திகையா? என்பதனை காலம் சொல்லும்.

### விடுதலைக்கு வழிசொன்ன மார்க்சு

**கதிர் இல்லையென்றால் ஒளி இல்லை.**
**காற்று இல்லையென்றால் உலகியக்கம் இல்லை.**
**முதலாளியமில்லையென்றால் சுரண்டல் இல்லை.**
**கார்ல் மார்க்சு என்ற பேராசான்**
**தோன்றியிராவிட்டால், உழைக்கும் மக்களுக்கு**
**வழி சொன்ன மார்க்கியமே இல்லை.**

## 3. தோழர் குரு:

வன்முறையை நியாயப்படுத்தி வரிகளாக்கிய தோழர் குரு மக்களின் உதவியோடு தூக்குமரத்தை தூர நிறுத்திய வரலாற்றுக்குரியவர் என்பதாலும் விதையாகிப்போன தோழர்க்கான சிறப்பிதழ்

www.padippakam.com



இது என்பதாலும், இவரைப் பற்றி எழுதத் துவங்கினால் பக்கங்கள் பற்றாக்குறை ஏற்படும் என்று ஆசிரியர் குழுவினர் கருதுவதாலும் மற்றொரு வாய்ப்பை எதிர்நோக்கி இவ்விதழில் தவிர்க்கின்றோம்.

## வன்முறை போற்றுதும்

வன்முறை போற்றுதும்
வன்முறை போற்றுதும்
உலகின் விடிவிற்கு
உகந்ததோர் அறமாய்
நன்முறை யாதும்
இல்லையாதலால்
வன்முறை போற்றுதும்
வன்முறை போற்றுதும்!

படைப்பாளிகள் குறிப்புத் தொகுப்பு: ஊர்சுற்றி உலகப்பன்

## பண்பாட்டுப் புரட்சி

கருப்புடையின் விளக்கம்
பண்பாட்டுப் புரட்சி
அதன் பொருள், தேவை,
அறிந்து தெளிந்தது
அப்போராளியைப் படித்தபோது.

விடுதலைப் பாவலன்
நெறியில் தோழரும்
மார்க்சின் தொண்டனாய்.
உழைக்கும் கூட்டம்
விழித்தெழுந்து அணிவகுத்தது
போல் பொட் தலைமையில்!
வெடித்தது மக்கள் எழுச்சி
அதன் பெயரே
பண்பாட்டுப் புரட்சி.

படிப்பகம்

www.padippakam.com

# நன்றியும் விளக்கமும்

## ஆய்வுத்தும்பி

மாந்த நல வாழ்வியலுக்குப் பல்வேறு சித்தாந்தங்களை அறிஞர் பல்லோர் அரிதின் முயன்று வகுத்துப் படைத்தளித்துள்ளனர். அவ்வனைத்தினும் மிகச் சிறந்த மெய்யியலாக இன்றளவும் திகழ்ந்து வருவது மாந்த நேயம் மணக்கும் மார்க்கியம். அவ் வாழ்வியல் நெறியதனை வளர்த்தெடுத்துப் படைக்கலனாக்கியவர் துன்பத்தால் தொடர்ந்து விரட்டப்பட்ட பேராசான் கார்ல் மார்க்சு. மார்க்சோடு இணைந்து இயங்கி, அப்போராளி விதைக்கப்பட்ட பின்னும் தொடர்ந்து இயங்கியல் நெறியதனை செழுமைப்படுத்தியவர் பேராசான் பிரெடெரிக் எங்கெல்சு. மூலவர்களின் அடிச்சுவட்டில் பல் வேறு சிக்கல்களுக்கு தீர்வு கண்டு, இவ்வுலகின் முதல் உழைக்கும் மக்கள் அரசை நிறுவியவர் குறுந்தாடி குயில் தோழர் இலெனின்.

தோழர்கள் மார்க்சும், எங்கெல்சும் கூடி வினை செய்தளித்த "கட்சி அறிக்கை"க்காகத் தாங்கள் மறைந்த பின்னும் போற்றப் படுவோம் என்றெண்ணியிருப்பார்களா? அல்லது உழைக்கும் மக்களின் பெருந்தலைவனென்றும், மாமனிதனென்றும் தம்மைக் கொண்டாடுவார்கள் என்று நாடு கடந்து தோழர் குரூப்சுகாயாவுடன் இணைந்து ஏடு நடத்தியபோதும், வினையாற்றியபோதும் இலெனின்தான் கருதியிருப்பாரா? அப்பெருந்தகைகளின் "மாணவர்" என்பதே நம்மின் தகுதியும், முகவரிரிம். (தங்கள் வாரிசுகளை பெரும் பங்குத் தரகர்களாகவும் தங்களுக்குப் பின் நாட்டை ஆளவும் எவராவது இங்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தால் மக்களின் ஏமாளித்தன்மையால் வந்த விளைவிது என்று கருதிக் கொள்க.)

நாம் பெற்றிருக்க வேண்டிய பலவற்றையும் இழந்துவிட்டோம் என்ற நண்பர்களின் அனுதாப அறிவுறுத்தல்கள் அவ்வப்போழ்து. திரும்பிப் பார்க்கின்றோம் கடந்துவிட்ட பாதைதனை. முன் சொன்னவர்கள் உரைத்ததில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது; என்றாலும் அதற்காய் ஒருபோதும் வருந்தியது கிடையாது. ஏன்?

முன்னோடிகள் அடைந்த இன்னல்களோடு ஒப்பிட்டால் பின்னது தூசு என்பதாலும், அறிந்தே ஏற்றுக்கொண்ட பணியென்ப

படிப்பகம்

www.padippakam.com



தாலும்தான். நம்மின் இற்றை நாள் வாழ்விற்கு அற்றை நாள் உழைக்கும் மக்கள் செய்த ஈகங்கள் பல என்பதனை வரலாறு உரைக்கின்றது. அதனின் தொடர்ச்சிதான் நம் பணி என்று முடிவு செய்து விட்டோம். முழுமைப் பெறுவதற்கான பயணம் தான் நம் வினைப்பாடுகள்.

## நண்பர்களுக்கு நன்றி

"பெரியார்" இந்த நூற்றாண்டின் தமிழின மீட்பின் அடையாளம் என்று சொல்வது ஒன்றும் பிழையாகாது. இவ்வினக்குழுவில் பிறந்துவிட்ட ஒவ்வொருவரும் அவருக்கு நன்றியுடையவர்கள் என்று மாரிக்காலத் தவளை போல் கத்தி வருகின்றோம். அவரின் பெரும்பணியை உணர்ந்ததின் உள்வாங்கல்களின் விளைவுதான் இரண்டு இதழ்களிலும் வெளிவந்த உரை வீச்சுகள். இந்தச் சூழலில்தான் பெரியாரியத்தை மறுதளிப்பதாய் நம்மீதான குற்றச் சாட்டுகள். இவற்றை அண்மைக்கால நம் திறனாய்வுகளின் அடிப்படையில் சுமத்தப்படுவதாய் அறிகின்றோம்.

ஏங்கல்சைத் திறனாய்ந்த மார்க்சின் செயலுக்குப் பெயர் மறுதலிப்பு என்றால் இச்சுமத்தல்களை பெரு மகிழ்வோடு ஏற்கின்றோம். இருக்கின்ற அனைத்தையும் விருப்பு வெறுப்புக்கிடமின்றி திறனாய்வது நம் கடப்பாடு. விமர்சனம், தன்விமர்சனம் இவை இரண்டையும் மார்க்சிடமிருந்து கற்றுக் கொண்டோம் என்று விடுதலைப் பாவலன் சொன்னது மேலே குறிப்பிட்டதைத்தான் என்பது நம்மின் புரிதல். இவ்விரண்டிற்கும் தம்மை உட்படுத்திக் கொள்ளாதோர் இயங்கியலராக உருப்பெற்றது இல்லை என்பதனை வரலாறு உணர்த்துகின்றது. இத்தகையோரை எதிர்த்து அவர்களின் முகத்திரையைக் கிழித்ததில் தோழர் இலெனினது பங்கு பாரியது.

தமிழர் என்று சொன்னால், பாப்பானும் சேர்ந்து கொண்டு தானும் தமிழன்தான் எனச் சொல்வான் என்பதால்தான் "திராவிடர்" என்று அழைக்கின்றோம் என்றார் பெரியார். இன்றைய நிலையென்ன? இத்தமிழரை சுரண்டுவோரில், இழிவுபடுத்துவோரில் "திராவிடர்" என்ற பெயரால் நம் தோள் மீது செட்டியாய் அமர்ந்துகொண்டுவிட்ட அண்டைவீட்டுக்காரரின் ஆளுமையானது

படிப்பகம்

www.padippakam.com



பிறர்க்கு ஒன்றும் குறைந்தது இல்லையே! இத்தகைய நடப்பியல் உண்மைகளைச் சுட்டுவதற்குப் பெயர்தான் மறுதலிப்பா?

1946 முதலே இந்தியை எதிர்த்த பெரியார் 1965 காங்கிரசு ஆதரவு காரணமாக எதிர்ப்பில் பின்தங்கித் தொய்வுற்றார். இது ஒரு பிழையாகவே போய்விட்டது என்கிறார் நம் அன்பிற்குரிய தோழர் ஆனைமுத்து என்கிற எழுபதைக் கடந்த இளைஞர். பெரியாரியத்தை வாழ்வியலாகக்கொண்ட தன்மானம், பகுத்தறிவு இவற்றோடு விடுதலை பெற்ற உலகு மதிக்கும் இனமாக தமிழினத்தை உயர்த்திட வேண்டுமென்ற வேட்கையில் காட்டுத்தனமாய் வினைப்பாடாற்றி வருகின்ற பெரியாரியல் ஆய்வறிஞர் அவர். இன்றைக்கும் இனி என்றைக்கும் பெரியாரியத்தை ஆய்வோர்க்கு அவர் அளித்த புதையல்தான் "பெரியார் சிந்தனைகள்'' என்ற மூன்று தடித்த பொத்தகங்கள். (ஈராயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்கள் முழுவதுமாய்.) இன்னும் பெரியாரலேயே அறிஞர் எனப் பட்டவர்தான் சொல்கின்றார் "பிழை'' என்று. இதற்குப் பெயர் மறுதலிப்பா? நாம் ஒவ்வொரு வேளையும் வியப்பது எலும்பின் ஆற்றலைக் கண்டு. வரலாற்றில் இடம் பெறும் ஐயாவின் அரும் பணியை. பிறிதொருவர் வெலிக்கடை சிறை உடைத்த ஐயா டேவிட் விவிலிப மறையறிஞர் தோற்றத்தில். நீண்ட வெண் தாடிக்கும், கள்ளமற்ற மழலைப் புன்னகைக்கும் உரியவர். அகிம்சையைச் சொல்லும் வெள்ளுடை, அணுகி பழகினால் தெரியும் தோற்றத்தை வைத்து முடிவு செய்வது பெரும்பிழையென்று. பிறர் சொன்னால் அனுமானம் நாம் சொல்வது அனுபவம். கிழத்திற்கு மறத்தன்மை ஒரு படி மேல்தான் என்பதனை மறு உறுதி செய்துகொண்டோம் அவருடன் பயனித்த போழ்து.

இவ்விரு போராளிகளின் அகவையில், நாம் உயிர் வாழ்ந்தாலும் எங்காவது ஒரு முனையில் சுருண்டுதான் கிடப்போம் என்பதும் மிக உறுதி. அவர்களுடனான அந்தப் பொழுதுகள் வாழ்வில் எப்பொழுதாவது அமைந்துவிடும் விலைமதிப்பற்ற மணித்தியாலங்கள்.

பெரியாரியத்தைப் போர்க்கருவியாக்கும் பட்டறைப் பாசறைப் பணியில் தோழர்களும் இயக்கத்தோரும் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பன்னூறு. நம்மைக் குறை கூறுவோர் அப்போராளி இளைஞர்களின் (செயலில்), பெருஞ்செலவில் தங்களையும் இணைத்துக் கொண்டால் பெரியாரியம் சிறக்கும், பரவும், வெல்லும். எண்ணிப் பார்ப்பார்களா!

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் என்ற பெருந்தகையின் உழைப்பு திராவிடத்தால் உறிஞ்சப்பட்டும், தன்வயமாக்கிக் கொழுத்துவிட்ட நிலையிலும் மீளாய்வுகள் நிகழ்த்தப்படல் வேண்டும் என்ற முன்மொழிதல் பட்டறிவால் ஏற்பட்டதே. நன்றி என்பதன் பொருட்டு அவரின் நிலைப்பாடுகள் அனைத்தையும் நியாயப்படுத்துவதோ, ''பிழை'' என்ற சொல்லிற்கு அப்பாற்பட்டவர் ஐயா என்று கருதுவதும், உருவகப்படுத்துவதும் பெரியாரியத்திற்கு இழுக்கு சேர்ப்பதாய்த் தான் அமையும் என்பதுதான் நம் துணிபு.

இனியும் பெரியார் தொடர்பிலான எழுத்தாக்கங்கள் இடம் பெறவேண்டுமா 'தேடலில்' என்று தோன்றுவதைத் தவிர்த்துவிட இயலவில்லை...! முடிவெடுக்க வேண்டியது ஆசிரியர் குழுவைப் பொறுத்தது.

தமிழியத்தின் எழுச்சிக்கு திராவிடத்தின் பங்களிப்பை ஏன் மறைக்கின்றீர்கள் என்பது கூக்குரலாக்கப்படுகிறது. வரலாற்றை மறுதலிப்பவர்கள் அல்லர் நாம். தமிழ்க் கூட்டம் தனியொரு தனித்தன்மை இனமாய் விளங்க பெருந்தடையாய் அமைந்ததும் இத்திராவிடம்தான் என்ற உண்மையை ஏன் ஒப்புக்கொள்ள மறுக்கிறீர்கள் என்பதே நம் வினா!

திராவிட இயக்கம் என்ற புட்டிக்குள் அடைபட்டுப் போகின்றவர் அல்லர் பெரியார். மாறாய் அதையும் கடந்த தனி இயக்கமவர். ஆம், பெரியாரியக்கம் என்பதுதான் அது. அவரின் இறுதிக் கால செயல்பாடுகளின் விளைவுகள் அவரின் பெரும்பணியை மங்கலாக்கி மறைத்துவிடும் அளவிற்கு பேருருவெடுத்துள்ளது.

வாருங்கள் உழைக்கும் மக்கள் நெறியோடு, செறிவாய் வாழ அயராது உழைப்போம்.

---

**மாந்த விடுதலைக்கும் ஏற்றத் தாழ்வு, சுரண்டலற்ற குமுகக் கட்டமைப்புக்கும் மார்க்சியமே நெறிமுறை.**

படிப்பகம்

www.padippakam.com



## உழைக்கும் மக்கள் குருதி

மதத்தின் பேரால் பலியிடப்பட்ட
உழைக்கும் மக்களின் குருதியால்
வரலாற்றுப் பக்கங்கள்
கறை படிந்துள்ளன.

## நன்றி

கலங்கரை விளக்கே
கார்ல் மார்க்சே —நீங்கள்
விதைக்கப்பட்டிருக்கும்
திசை நோக்கி
முழங்கைகளை உயர்த்துகின்றோம்
நன்றி
என்பதன் பொருளறிந்தவர்கள்
தாங்கள் என்பதால்.

## வேண்டுவது

ஒவ்வொரு வரியையும்
திறனாயுங்கள்
புரிதல்கள் ஆழப்படவும்
பிழைகள் களையப்படவும்
எண்ணத்தை உரமாக்கி
இலக்கியம் படையுங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

முன் அட்டைத் தொடர்ச்சி—

மன்னர் ஆட்சியை தாக்கி எட்டுப்பக்கக் கட்டுரை வரைந்ததற்காக வழங்கப்பட்ட கல்வித்தொகையை இழந்தார் பண்பாட்டுப் புரட்சியாளர் போல்பொட் என்பதும் வரலாறு.

அம்மூவரும் இத்தகு செயற்பாடுகளில் ஈடுபட்டது பொழுதுபோக்கிற்கு அல்ல. உழைப்பைமட்டுமே உடைமையாய்க் கொண்ட மக்களுடைய அடிமை விலங்கை அறுத்தெறிவதற்காகத்தான். தோழர்களின் வினைப்பாடுகளைச் சொல்லி அவர்களை வழிபடுவது அல்ல பிறந்தநாள் கொண்டாடுவதின் நோக்கம். மாறாய் அவர்களையும் ஆற்றிய பணிகளையும் நினைவிலேந்துவதோடு உழைக்கும் வர்க்கத்திற்கான விடுதலையை அடைய விதையாய்ப் போன போராளிகளின் வழியினைத் தொடருவதோடு மேலும் பல திட்டங்களை வகுப்பதற்கும்தான் இத்தகைய நாட்களை நாம் பயன்படுத்திக்கொள்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது என்று துவங்கி பல்வேறுகருத்துகளைத் தொடர்ந்து ''மலைகளை அகற்றிய மூடக் கிழவன்'' என்ற மாவோவின் எடுத்துக்காட்டை மேற்கோளாய்க் கொண்டு தாய் நில மக்களை அழுத்திக் கொண்டிருக்கும் நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் என்ற இருமலைகளையும் அகற்ற மார்க்கிய-இலெனினிய நெறியில் திட்டமிட்டு வினையாற்றி, பாட்டாளி வர்க்க சர்வதிகார அரசமைக்க ஒன்றுபட்டு செயலாற்றுவோம் வாரீர் என்னும் வேண்டுகையோடு முடித்தார் தோழர் அமாட்பாக்தாத் தம்உரையை.

படிப்பகம்

www.padippakam.com

## அடுத்த இதழில்—

காட்டு நாகப்பழம் முகாமிலிருந்து சுருள் முடியும், கருப்பு உருவமும் கொண்ட

**சென் யாங் கின்**

நேர்காணல் உரையோடு—

**"தோழமை கிராமம்."**

**பண்பாட்டுப் புரட்சி ஒன்றிற்காய்**
**இந்த நூற்றாண்டின் இறுதியில் புறப்பட்டவர்களின்**
**தென்கிழக்காசிய வெளியீடு**

ALLWELL PRESS, CHENNAI-600019

படிப்பகம்